உ

சிவமயம்.

JEEVANANTHA BODHINI

A HIGH CLASS TAMIL MONTHLY MAGAZINE.

ஜீவானந்தபோதினி

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

திருக்குறள்.

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

9 JAN 1924

மலர் க. Vol. 1.	ருத்ரோத்காரி ஞு ஆனிமீ (ஜூன்மீ 1923 ஞு)	இதழ் ங. No. 3-

விஷயங்களின் குறிப்பு.

1. கடவுள் வணக்கம்.
2. நாவல் அல்லது நவீனக்கட்டுக்கதை.
3. சுந்தரமூர்த்தி சுவாமிகள்.
4. குடியர்களின் விநோதம்.
5. நம் சகோதரிகளை அந்நியர் பாடசாலைக்கு அனுப்பலாமா.

6. வேடிக்கை கதைகள், 7. சிறுவர்க்கான கதை, 8. அறிவுவிளக்கக் கதை, 9. ஸ்திரீகளுக்கான கதை, 10. பொதுக்கதை, 11. பூனை நண்பன், 12. கடனும் வீண் விரயமும். 13. விவசாயம், 14. ஞாயிறுசெய்யும் வஞ்சகம், 15. கீதா வசனபூஷண மான்மியம். 16. விளம்பரங்கள்.

1923

Printed & Published by N. T. Rathinavelu Mudalar,
THANIAMBAL VILASAM PRESS,
1/382, Mint Street, Madras.

...கை வளையல்கள்

இது பளபளப்பான ரோல்ட் கோல்டு இமிடேஷன் பொன்னினால் பலமாதிரி பூ இலை கொடிகள் ஒன்றோடொன்று பின்னியது போல வெகு அழகாயும், வேலைத்திறமாயும் செய்யப்பட்டு சீமையிலிருந்து வந்திருக்கிறது இதைபார்பவர்கள் பொன்னால் செய்த கைவளையல் என்றே எண்ணுவார்கள் எப்பொழுதும் கருக்காமல் இருக்கும் இது எல்லா மதஸ்தர்களும், பெரியோர்களும் சிறியோர்களும் அணிந்துக்கொள்ளலாம்.

ஜதை 1-க்கு ரூபா 2—0—0. தபால்சிலவு அணா 4.

இரண்டு ஜதைகள் வாங்கினால் தபால்சிலவு இனாம்.

அமெரிக்கன் கோல்டு பாலிஷ் போடப்பட்ட 50 செஜ்ஜைகள் கட்டின ஒட்டியாணம் 1-க்கு ரூபா. 5—0—0

60 காசு அடங்கிய கம்பியால் பின்னப்பட்ட காசிமாலை	1-க்கு	ரூ. 6
கழுத்து கண்டி	,,	ரூ. 3
நெக்லேஸ்	,,	ரூ. 3
ஒத்தைப் பட்டைச சரடு	,,	ரூ. 3

ரூபா 500 மதிப்பிடக்கூடிய
ரோல்டு கோல்டு இமிடேஷன்
டைமண்டு கம்மல் ரூபா 3.



இக்கம்மல்கள் ரோல்ட் கோல்டினால் செய்... டேஷன் வைர வெள்ளை கற்கள் ஏழு பதித்து அதிக வேலைப்பாட்டுடன் தற்கால நாகரீகத்திற்கேற்றபடி தயாரிக்கப்பட்டது. இக்கற்களின் பிரகாசமும் ஜொலிஜொலிப்பு அசல் வைரம் போலவே இருக்கும். இதைப் பார்ப்பவர்கள் வைரமென்றே நினைப்பார்கள். இங்கிலீஷ் இமிடேஷன் டைமண்டு ஆனதினால் இக்கற்களின் நிறம் மாறவேதே கிடையாது.

கம்மல் ஜதை 1-க்கு பெட்டியுடன் ரூபா 3.

ரோல்ட் இமிடேஷன் டைமண்டு மோதிரம் 1-க்கு ரூபா 1—8—0.

கடுக்கன்கள்.

இங்கிலீஷ் ரோல்ட் கோல்டில் செய்யப்பட்டு உயர்ந்த பாலீஷ் கொடுக்கப்பட்டதும் அழகான இமிடேஷன் கல் பதிப்பிக்கப்பட்டதும் ஜனங்கள் ரூபா 50-க்கு மதிப்பிடக்கூடியதுமானது.

கடுக்கன் ஜதை 1-க்கு ரூபா 1—4—0.

N. T. ஜீவா & கோ.,
1-382, தங்கசாலை தெருவு,
சௌகார்பேட்டை, மதராஸ்.

உ

சிவமயம்

ஜீவானந்த போதினி

கதைகளையும், கட்டுரைகளையும், நவீனங்களையும்
தன்னகத்தடக்கிக்கொண்டு வெளிவரும்
ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை

திருக்குறள்

"இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

ALL RIGHTS RESERVED

மலர் I.	உருத்திரோத்காரி வருஷம் ஆனி மாதம்	இதழ் ௩.
Vol. I.	JUNE 1923	No. 3.

29 JAN 1924

கடவுள் வணக்கம்

மைப்படிந்த கண்ணாளும் தானும் கச்சி
மயானத்தான், வார்சடையன் என்னின் அல்லான்
ஒப்புடையன் அல்லன்; ஒருவன் அல்லன்;
ஓர் ஊரன் அல்லன்; ஓர் உவமன் இல்லி;
அப்படியும், அந்நிறமும், அவ்வண்ணமும்
அவன் அருளே கண்ணாகக்காணின் அல்லால்
இப்படியன்; இந்நிறத்தன்; இவ்வண்ணத்தன்;
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே.

— நாவுக்கரசர்.

பார்உருவில் நீர்எரிகால் விசும்பும் ஆகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏர்உருவில் மூவருமே என்ன நின்ற
இமையவர்தம் திருஉருவே றெண்ணும்போது,
ஓர்உருவம் பொன்உருவம்; ஒன்று செந்தீ;
ஒன்றுமா கடல்உருவம் ஒத்து நின்ற
மூஉருவும் கண்டபோ தொன்றும் சோதி
முகில்உருவம் எம்அடிகள் உருவந்தானே.

— திருமங்கை ஆழ்வார்.

22478

உ

சிவமயம்

ஜீவானந்த போதினி

உருத்திரோத்காரி வருஷம் ஆனிமாதம்

நாவல் அல்லது நவீனகட்டுக்கதை

இக்காலத்தே எண்ணில்லாத ஆண்மக்களும் பெண்மக்களும், சிறுவரும் சிறுமியரும் நாவல் என்னும் நவீனக் கட்டுக்கதைகளை வாசித்தலில் கண்ணுங்கருத்து முடையோராய் இருக்கின்றனர். அநேக செல்வந்தர்கள், தங்கள் வீட்டிற்கு மாதந்தோறும் வாங்க வேண்டிய இன்றியமையாத பொருள்களோடு இதனையும் ஒன்றாக மதித்து வாங்கி வருகின்றனர். பொருள்கொடுத்து வாங்குதற்கியலாத ஏழைகள் இரவல் வாங்கியேனும் அதனை வாசிக்கவே முயல்கின்றனர். பாடசாலையில் வாசிக்கும் சிறுவர் சிறுமியர்கூடத் தங்கள் பாடபுத்தகங்களோடு அதனையும் ஒன்றாகச்சேர்த்துஎடுத்துச்சென்று 'நாவல் வாசிப்பதற்கு எப்போது ஒழிவு ஏற்படும்' என்று ஏங்கி நிற்கின்றனர். பலவருடங்களாக உழைத்து முடிவில் உபகாரச் சம்பளம் பெற்று ஓய்வடைந்திருக்கும் கிழவர்களும் நாவல் என்னும் நவீனக்கட்டுக்கதைகளின்மீது ஆவல் வைத்து இரவும் பகலும் இதனையே வாசித்துக்கொண்டிருக்கின்றனர்.

இவ்வாறு இதனை எல்லோரும் வாசித்தற்குக் காரணம் யாது? இப்பழக்கம் எப்போது வந்தது? இக்கதையினை வாசித்தல் அவசியந்தானா? இவை முதலான பல ஆசங்கைகள் எல்லோருக்கும் நிகழ்தல் இயல்பாதலின் இவைகளைக்குறித்து ஒரு சிறிது ஆராய்வாம்:

குடும்பவாழ்க்கையில் ஈடுபட்டிருக்கும் மக்கள், வறுமையாலேனும், பிணியாலேனும் எண்ணிய எண்ணியாங்கு முடிவுபெறாமையாலேனும் ஊக்கமிழந்து மனங்கலங்கி வருந்துங்காலத்து அவர்கள் அவ்வாறு துன்புறாது தங்கள் குடிவாழ்க்கையை ஒழுங்குபெற நட[illegible] பெரியோர்கள் அவைசம்பந்தமான உண்[illegible]டியேனும், தாமே பல சரிதங்களைப்

[illegible]

புனைந்துரைத்தேனும் அவர்கள் மனத்தைத் தேறுதல் செய்தல் இயல்பு. இராமாயணம், மகாபாரதம், நளன் சரிதம், அரிச்சந்திர புராணம் முதலிய சரிதங்கள் யாவும் இக்காரணம்பற்றியே எழுந்தன. அவைகளுள் முழுவதும் உண்மையாகவே யுள்ளன சில; உண்மையும், பொய்யுங்கலந்துள்ளன சில; முற்றிலும் புனைந்துரையாகவே யுள்ளன சில; அவைகளை, 'இவை இவை இன்னின்ன பகுதியில் சேர்ந்தவை' என நம்மால் வகுத்துரைக்கச் சிறிதும் இயலாது. எவ்வாறிருப்பினும் யாவும் நீதியையே உணர்த்துவனவாதலின் அறிவுடையார் அவற்றை அங்கீகரிக்கின்றனர். அன்றியும் ஒரு நூலாசிரியன், ஒரு சரிதத்தைத் தானே புனைந்துரைத்திருப்பினும், அதன் கண்ணுள்ள விஷயங்கள் யாவும் பெரும்பாலும் தான் அனுபவத்திற்கண்டவைகளாயேனும், பிறர்பால் கேட்டவைகளாயேனும் இருக்குமேயன்றி, 'மலடிமகன் முயற்கொம்பின்மீதேறி ஆகாயத்தாமரையை அறுத்தான்' என்பதுபோன்றிராதாதலால் அக்கதை மக்கட்கு அறிவுவிளக்கத்தையே அளிப்பதாகின்றது.

இவ்வாறு தோன்றும் சரிதங்கள் காலவேறுபாடுபற்றியும், தேசவேறுபாடுபற்றியும் பல மாறுபாடுகள் அடைகின்றன. முற்காலத்துக்கதைகளுள் பெரும்பாலன இக்காலத்துக்குப் பொருந்தா; பிறநாட்டுக் கதைகளுள் பெரும்பாலன நம் நாட்டுக்குப் பொருந்தா; இவ்வாறே வழக்கவொழுக்கங்களும் பொருந்தாதொழிகின்றன.

ஆதலின் உண்மைச் சரிதங்களாயிருப்பினும், கட்டுக்கதைகளாயிருப்பினும் அவை காலத்திற்கும் தேசத்திற்கும், வழக்க வொழுக்கங்கட்கும் ஒத்தவைகளாய் இருத்தல்வேண்டும். அத்தகைய நூல்களே உலகத்திற்குப் பயன்படுவனவாய் நெடுங்காலம் நிலைத்திருக்கும். சுபம்.

மயிலை - சிவ - முத்துக்குமாரசாமி முதலியார்,
சென்னை, முத்தியாலுப்பேட்டை
உயர்தர கலாசாலைத்,
தமிழ்ப்புலவர்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள்

(2-வது இதழ் 16-ம் பக்கம் தொடர்ச்சி)

பின்பு ஒருநாள் கோவில் மண்டபத்தில் இருந்த சிவனடியார்கள் கூட்டத்தைக்கண்டு பக்தி பரவசராய்த் "தில்லைவாழந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" எனத்துவக்கிப் பாடல்கள் பாடி இத்தொண்டருக்கெல்லாம் நான் அடியவன் எனச் சொல்லித் துதித்தார்.

திருஆரூரில் தியாகராஜப்பெருமான் அருள்பெற்று பகவானையே தன் தோழனாக அடைந்து ஆனந்தமாயிருந்தார். ஒரு சமயம் திருஆரூரில் பங்குனித் திருவிழாவில் சிவனடியார்களுக்குச் சமாராதனைசெய்யப் பணம் இல்லாமல் வருந்திச் செங்கல்லைத் தலைக்குவைத்துத் தியாகராஜனை வேண்டிப் படுத்திருந்தார். பிறகு விழித்தெழுந்து பார்க்கும்போது செங்கல்லே தங்கக்கல்லாயிருக்க மகிழ்ந்து அதை விற்று சமாராதனை செய்தார்.

பிறகு, சிவஸ்தலயாத்திரை செய்துவரும்பொழுது வேதாரணியத்தில் பகவான் பன்னீராயிரம் பொன்தர, அதைத் திருஆரூர் கமலாலயத்தில் தமக்குக் கிடைக்கும்படி வேண்டி மணிமுத்தா நதியில் போட்டு வந்தார். பின் திருஆரூருக்கு வந்து கமலாலயத்திலிருந்து அப்பொன்னைப் பெற்றுக்கொண்டனர். இதைக்கண்டு எல்லாரும் அதிசயித்தனர். மற்றுமோர்சமயம் சிவஸ்தல யாத்திரை செய்து வந்த சுந்தரர் வழியில் களைத்து விழுந்தார். பகவான் தமது பக்தனைக் காப்பாற்றும் பொருட்டு, பிராமணவடிவம் கொண்டு அவருக்கு அன்னம் இட்டுக் களைதீர்த்து உபசரித்து மறைந்தார். இன்னொரு ஊரில் பகவான் பிராமணர்களின் வீடுகளுக்குச் சென்று அன்னம் யாசித்து வந்து சுந்தரர் பசிக்குக் கொடுத்தார். தனது கஷ்டத்தை மதிக்காமல் தன் பக்தனுக்கிரங்கிப் பலவிதமாக பகவானாகிய பரமசிவன் இவ்விதம் உதவிசெய்துவர, 'ஐயோ எம்பெருமானுக்கு இவ்வளவு சிரமம் கொடுத்தேனே' என்ற வருத்தம் ஒருபுறமும், 'எனக்கு இந்த பாக்கியம் கிட்டிற்றே' என்ற ஆனந்தம் ஒருபுறமுமாகச் சுந்தரர் சிவக்ஷேத்திரங்கள்தோறும் சென்று பகவானைத் தரிசித்துத் துதித்துப் பாடுவதே தொழிலாய்க் கொண்டார்.

இப்படியாகச் சுந்தரர் திருவொற்றியூரையடைய அங்கே பார்வதிதேவியாரின் சேடிகளில் மற்றொருத்தி சங்கிலியார் என்ற நாமதேயத்துடன் பிறந்து வளர்ந்துவர, பகவான் அருளால் (மறுபடியும்

பரவையாரிடம் போகவில்லை என உறுதிமொழி கூறியபிறகு) அவளேயும் விவாகம் செய்துகொண்டு சிலநாள் அவ்விடமே இருந்தார். பிறகு திருஆரூர் தியாகேசரை நினைத்துப் புறப்பட்டு வந்தார். சங்கிலியாரை மறந்து வந்ததுபற்றி பகவான் கோபித்து, சுந்தரருக்கு இருகண்களும் தெரியாமல் போகும்படி தண்டித்தார். சுந்தரர் மிகவும் வருந்திப் பகவானை வேண்டிப் பலகாலும் துதித்தார். அவர் திருஆரூர் வந்தவுடன் கண்கள் திரும்பவும் பெற்றார்.

சங்கிலியாரைக் கலியாணம் செய்துகொண்டதைக் கேள்வியுற்ற பரவையார் கோபித்திருக்க, சுந்தரரது வருத்தத்தை நீக்கக் கருதி, பகவானே பரவையாரிடம் சென்று சமாதானம் செய்து இருவரையும்சந்தோஷமாய் இருக்கச்செய்தார். திருஆரூரில் சிலநாள் இருந்துவிட்டுப் பிறகு சிவஸ்தலங்கள் தோறும் யாத்திரைசெய்ய மறுபடியும் புறப்பட்டார். ஒவ்வொரு ஸ்தலத்திலும் பகவானைத் துதித்துப் பாடல்களைப் பாடிவந்தார்.

இவ்விதமாக யாத்திரை செய்துவருகையில் ஓர் ஊரில் ஒரு வீட்டில் ஒரு பிள்ளைக்கு உபநயனச் சடங்கு செய்துகொண்டு சந்தோஷமாயிருக்க, அடுத்தவீட்டில் ஒரு பிள்ளை முதலையால் இறந்துபோனதைக் குறித்து ஒரே அழுகுரலாயிருந்தது. அதைக் கண்ட சுந்தரர் பரிதாபங்கொண்டு பகவானைத் துதித்து அப் பிள்ளையை முதலைவயிற்றிலிருந்து அழைத்துக் கொடுத்தார்.

இவ்விதமாக இவர் பல இடங்களிலும் ஸ்வாமி தரிசனம் செய்து முடிவில் சிவபெருமான் திருவருளால் வெள்ளையானை மீதேறிக் கயிலை அடைந்தார்.

பித்தா பிறை சூடி பெருமானே யருளாளாய்
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை [டுறையுள்
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்
அத்தா உனக் காளாஇனி அல்லேன் எனலாமே.

முடியேன் இனிப் பிறவேன் பெறின் மூவேன் பெற்றமூர்த்தீ
கொடியேன் பல பொய்யே உரைப் பேனைக் குறிக்கொள்நீ
செடியார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறை
அடிகேள் உனக்காளாய் இனி அல்லேன் எனலாமே. [யுள்

குடியர்களின் விநோதம்

பிரசுரம் 1.

காப்பி குடியர்களும்	கட் குடியர்களும்
காலையில் காப்பி குடிப்பவர் சிலர்	காலையில் கட்குடிப்பவர் சிலர்
மாலையில் காப்பி குடிப்பவர் சிலர்	மாலையில் கட்குடிப்பவர் சிலர்
நினைத்தபோதெல்லாம் காப்பி குடிப்பவர் சிலர்	நினைத்த போதெல்லாம் கட் குடிப்பவர் சிலர்
காப்பி குடியர் அங்நேரத்தில் காப்பி குடிக்காவிட்டால் பித்தம் பிடித்தவர்கள் போல் அலைவார்கள்	கட்குடியர் அங்நேரத்தில் கட் குடியாவிட்டால் பித்தம் பிடித்தவர்கள்போல் அலைவார்கள்
காப்பிகுடியர்கள் கடனாவது வாங்கிக் காப்பி குடிக்கிறார்கள்	கட்குடியர் கடனாவது வாங்கிக் கட்குடிப்பார்கள்
காப்பி குடியர்களிடத்தில் பணம் இருந்தால் பலரை அழைத்துக்கொண்டு ஹோட்டலுக்குப் போய்ப் பணத்தைச் செலவழிக்கிறார்கள்	கட்குடியர்களிடத்தில் பணம் இருந்தால் பலரை அழைத்துக்கொண்டு கள்ளுகடைக்குப் போய்ப் பணத்தைச் செலவழிக்கிறார்கள்
காப்பி குடியர் எச்சிலையும் ஆசாரத்தையும் ஜாதியையும் மறந்து ஒருவன் குடித்த கோப்பையிலேயே இவர்களும் குடிக்கிறார்கள்.	கட்குடியர் எச்சிலையும் ஆசாரத்தையும் ஜாதியையும் மறந்து ஒருவன் குடித்த குடுவையிலேயே இவர்களும் குடிக்கிறார்கள்.

காப்பி குடியர்களே! நீங்கள் கட்குடியை இழிவாகப் பேசுகிறீர்களே! கண்டீர்களா உங்கள் இருவர்களுக்கும் உள்ள வித்யாசம்! இதனுல் உங்கட்குப் பொருள் நஷ்டமும், தேக அசௌக்கியமும், ஆசாரக்குறைவும் நேர்கின்றன என்று அறிந்தும் அதை விட்டீர்களில்லையே! நீங்கள் இப்படி வெளியில் சாப்பிட்டுவிட்டு வீட்டில் எதுவும் நன்ருயில்லை என்று அவர்கள்மேல் கோபிக்கிறீர்களே! காப்பி குடிப்பதற்கு உங்களிடம் வந்து அன்பாய் வார்த்தையாடி வந்த நண்பர்களில் ஒருவனுகிலும் உங்கள் கஷ்டகாலத்தில் உதவி செய்ய முன்வருகிருர்களோ? நீங்கள் இப்படி குடிப்பதினுலன்ருே எங்குப்பார்த்தாலும் காப்பிஹோட்டல்கள் ஆடம்பரமாய்ப் பிரசுரங்களுடன் வெளிப்படுகின்றன. அதிலும் சென்னையிலோ காபி ஹோட்டல்களைக் கணக்கிடவியலாது. அங்கு இருக்கிற மக்களுக்கா காப்பி ஹோடலுக்குப் போகத்தெரியாது—நாடகக்கொட்டகைகளுக்கும் மற்ற வீண்விஷயங்களுக்கும் செலவழிக்கத் தெரியாது? அநேகமாய் அவர்களுக்கு ஒற்றுமையில்லை; தேசாபிமானம் இல்லை; பாஷாபிமானம் இல்லை; ஒன்றும் தெரியாது; பெரிய தூக்கத்தில் இருக்கிருர்கள். இவர்களைத் தட்டி எழுப்பிச் சீர்த்திருத்துபவர்கள் ஒருவரும் இல்லையோ ?

பாரத புத்திரர்களே ! நமக்கு இவையெலாம் தகாது நம்முன்னோர்கள் இவ்வாறு இருந்தார்கள் ? தின்பதாலும் குடிப்பதாலும் நமக்கு இன்ப கிடைப்பதில்லை. உலக ஆடம்பரத்தில் சிறிதும் விருப்பம்வையாதீர்கள் குடி என்னும் பயனற்ற பழக்கத்தை அறவே யொழித்து நமது மனேபலத்தை விருத்திசெய்து மேன்மையை யடையுங்கள்.

M. V. நாதமுனி,
தமிழ் மாணவர் கழகம், சென்னை.

நம் சகோதரிகளை அந்நியர் . . .
. . . பாடசாலைக்கு அனுப்பலாமா?

[M. V. நாதமுனி. தமிழ்மாணவர் கழகம். சென்னை]

பிரசுரம்.—II.

எங்கள் நாடு, எங்கள் பாஷை, எங்கள் மதம், எங்கள் ஜாதி என்று புகழ்ந்து போற்றுதார் யாவர்? ஒருவருமிலர். அவ்விதமிருக்க நாம்மட்டில் இவைகளைக் குறித்துச் சிறிதும் சிந்தை செய்யாது நம் காலத்தை வீணில் கழித்துவரலாமா? நம் நாட்டின் முன்னேற்றத்திற்கும், நம் பாஷையின் வளர்ச்சிக்கும், நம் மதத்தின் சிறப்பினுக்கும், நம் ஜாதியின் உயர்வினுக்கும் நாமன்றோ காரணம்? இஃதுணராமல் பிறநாட்டார் நம்முடைய நாட்டையும், பாஷையையும், மதத்தையும், ஜாதியையும் மேம்படுத்துவார்கள் என்று எண்ணுவது எவ்வளவு பேதமை?

நம் தமிழ்நாட்டுச் சோதரர்களே! நாம் இத்தகைய நன்மைகளை அடைதற்குக் கல்வி மிகவும் அவஸ்யமானது அல்லவா? நாம் கற்றலோடு நம்முடைய சகோதரிமார்களையும் கற்கச்செய்தல் நமக்கு இன்றியமையாக் கடமையல்லவா? ஆனால் அவர்களை அந்நிய பாடசாலையில் அனுப்புதலால் யாது பயன்? அவ்வந்நிய நாட்டினர் தம்முடைய தேசமே சிறந்ததென்றும், தம்முடைய பாஷையே இனிமையானதென்றும், தம்முடைய மதமே உயர்வானதென்றும், தம்முடைய ஜாதியே மேலானதென்றும் கூறி நம் சகோதரிமார்களை மயக்கிவிடுவார்களன்றோ? அதனால் அவர்களுக்கு நம் நாட்டின்மீதும், பாஷையின்மீதும், மதத்தின்மீதும், ஜாதியின்மீதும் உள்ள அபிமானம் அறவே ஒழியுமல்லவா? ஆதலால் அருமைச் சோதரர்களே! நீங்கள் உங்கள் சகோதரிமார்களை அந்நிய பாடசாலைக்கு அனுப்ப என்றும் எண்ணுதீர்கள். நமது மதத்தையும், ஆசாரத்தையும் நன்கு போதிக்க வகைதேடுங்கள். நம் நாட்டின் சிறப்பினையும், நாகரிகத்தையும் நம் சகோதரிமார்களுக்கு எடுத்து விளக்குங்கள். நம் தாய்மொழியாகிய தமிழையே அவர்கள் மிகுதியாகக் கற்கும்படி செய்யுங்கள். நம் நாட்டுப் பதிவிரதா சிரோன்மணிகளின் சரிதைகளை அவர்கட்குப் பல்வகையாலும் எடுத்துப் போதியுங்கள். அப்போதுதான் நம் நாடு தழைத்து விளங்கும். நம் பாஷை செழித்து வளரும். நம் மதம் சிறந்து ஓங்கும். நம் ஜாதி உயர்ந்து திகழும்.

வேடிக்கை கதைகள்.

ராமன் தன் மைத்துனனை மரண தண்டனையினின்று விலக்கியது

ஒருநாள் ராமனுடைய மைத்துனன் இராயர் கோபிக்கும்படி ஏதோ ஒன்றைச் சொல்லிவிட்டான். அதனால் அவர் அவனுக்கு மரணதண்டனை விதித்துவிட்டார். இந்தச் செய்தி ராமன் காதிற்கு எட்டிற்று. அவன் உடனே ராயர் சபைக்கு வந்தான். ராயர் அவனைத் தூரத்தில் கண்டதும், "ஓ! ராமா! நீ வரவேண்டாம்! வரவேண்டாம்! நீ கேட்கப்போவது எனக்குத் தெரியும். நீ சொல்வதை இந்த சமயம் கேட்கவே மாட்டேன். அதற்கு விரோதத்தையே செய்வேன். இது உண்மை, உண்மை" என்று சொன்னார்.

ராமன் இதுதான் தருணமென்று, "மஹாராஜாவே! ஒரு விண்ணப்பம். அடியேனுடைய மைத்துனன் மிகவும் துஷ்டன், அவனை இப்பொழுதே தூக்கிற் போடவேண்டும். விடக்கூடாது. அதுதான் நான் சொல்லவந்தது" என்றான்.

இதைக் கேட்டதும் ராயர் திடுக்கிட்டு, "ஓகோ! ராமா! என்னை ஏய்த்தாயே! நான் பேச்சில் மாட்டிக்கொண்டேனே" என்று சொல்லி, அவனுடைய சமயோசித புத்தியை மெச்சி, அவன் மைத்துனனை விடுவிக்கும்படி உத்தரவு கொடுத்தார்.

ராமன் குளிர் காய்ந்தது.

ஒருநாள் ராமன் தன் குதிரைமீது ஏறி, அயலூருக்குச் சென்றான். வழியில் மழைபிடித்துக்கொள்ள, அவன் முற்ற நனைந்துப் போனான். அஸ்தமிக்கிறசமயத்திற்கு இவன் ஓர் ஊர்போய்ச்சேர்ந்து ஒரு சத்திரத்தில் நுழைந்தான். அவனுக்கு குளிரெடுத்துப் போய் விட்டதால் அதிக ஆவலுடன் கணப்பண்டை குளிர்காயப்போனான். ஆக்குப் பலர் அக் கணப்பைச் சூழ்ந்துக்கொண்டு, மற்றவருக்கு இடமில்லாமல் நெருங்கி உட்கார்ந்திருந்தனர், தென்னலி ராமன் அவர்களை அவ்விடத்தைவிட்டு அகற்றக்கருதி, அவர்கள் கேட்கும்படி சத்திர யஜமானனை உரத்த குரலோடு கூவி அழைத்து, "ஓ! பணியாக்காரரே! என் குதிரைக்குச் சிறிது ஆட்டு மாம்சம் போடும், அது நெடுந்தூரம் பிரயாணத்தால் களைத்து வந்திருக்கிறது" என்றான்.

மணியக்காரன், குதிரை "குதிரை சாகபக்ஷிணி யாயிற்றே! மாம்சம் உண்ணுமோ?" என்றான். ராமன், "என் குதிரையை நீர் பார்த்திருந்தாலன்றோ தெரியும். நான் சொல்லியபடி செய்யும்" என்றனன். அவன் "இஃதென்ன அதிசயம்!" என்று சிறிது மாம்சத்தோடு வெளியே செல்ல, கணப்பண்டை உட்கார்ந்திருந்தவர்களும் விநோதம் பார்க்க வெளியே ஓடினார்கள்.

ராமன் கணப்பை அணுகி, சுகமாக வேஷ்டி முதலியவற்றைக் காயவைத்துத் தானும் குளிர்காய்ந்து கொண்டிருக்கையில், மணியக்காரன் திரும்பிவந்து, "என்ன ஐயா! பெரும் புரளி செய்து விட்டீரே!" என்றான். தென்னாலி ராமன், "என் காரியம் ஆய்விட்டது. என் குதிரை இனி எதைத் தின்றாலென்ன" என்றான். அப்பொழுது தான் அவர்களுக்கு வந்தவன், தென்னாலி ராமனென்று தெரிந்தது.

சுகாதாரம்.

குளம், குட்டை, கிணறுகளில் ஜலம் நாற்றமும் பாசையும் அடைந்து குடிப்பவர்களுக்கு பேதி முதலிய கொடிய ரோகங்களை உண்டுபண்ணுவதெவரும் அறிவர். இதற்கு மயில்துத்தத்தை தூவுவதால் புழு பூச்சுகளை மாய்த்து சுத்தமாக்குகிறது. மயில்துத்தம் அளவாயிருக்கவேண்டும். மிதமிஞ்சினால் மீன்கள் மாண்டுவிடும். குளிர், காய்ச்சல், சலதோஷம், பேதி, வயிற்றுபாதை முதலியவைகளை உண்டாக்கும் வேற்றுநிறமடைந்திருக்கும் நீர்நிலைகளில் இம் மயில்துத்தத்தை உபயோகிப்பது மிகவும் நல்லதே.

பசும்பால்:—கறந்து சூடாறுமுன் சாப்பிட ஜீரணம் சீக்கிரத்திலுண்டாகி அதன் சுகத்தைக் கொடுக்கிறது. சுண்டக் காய்ச்சியபால் 100-க்கு 8 பாகம் ஜீரணமாகாமற் போகிறது. பால் சாப்பிடும்போது கொஞ்சம் கொஞ்சமாய் சாப்பிடவேண்டும். பால் கறக்க ஆரம்பிக்கும்போது துர்நாற்ற மில்லாத இடத்தில் பசுவின் மடியில் உள்ள அழுக்குகளை இளம் வெந்நீரால் நன்றாய் கழுவியபிறகு கறக்கவேண்டும். இல்லாவிட்டால் அப்பால் பயன் தராது.

சிறுவர்க்கான கதை.

(வீரமுள்ள சிறுவன் தொடர்ச்சி.)

"என்ன அதிர்ஷ்டம்! இவ்வளவு அதிகாலையில் எனக்கு ஒரு அப்பம் கிடைத்து விட்டதே! இந்த ஒரு அப்பம் வேலையைச் செய்வதற்கு எவ்வளவு வலிவைக்கொடுக்கும்!" என்று அவன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான். பிறகு அவன் தன் பெட்டிக்குள் வைத்திருந்த சிறிது வெண்ணெயை எடுத்து வந்து அந்த அப்பத்தின் மேல் தடவி வைத்துவிட்டு, "இப்பொழுது இந்த அப்பம் நிரம்ப ருசியாய் இருக்கும். ஆனால் கையில் இருக்கும் சட்டையைத் தைத்து முடிந்த பிறகுதான இதைத் தொடவேண்டும்," என்று தீர்மானித்தான்.

அப்படியே, அவன் அப்பத்தை மேஜைமேல்தானே வைத்துவிட்டுத் தன் வேலையைச் செய்யத் தொடங்கினன். அப்பத்துமேலுள்ள ஆசையால் வேலையைச் சீக்கிரம் முடிக்கவேண்டுமென்று அவசரம் அவசரமாய்த் தைத்தான். அதனால் அவன் தையலில் மூட்டுகள் வரவர அகலமாய்ப் போய்க்கொண்டிருந்தன.

அவன் இருந்த அறையின் சுவர்களின்மேலும், மச்சின்மேலும் ஈக்கள் கூட்டம் கூட்டமாய் அடைந்திருந்தன. அவைகள் அப்பத்தின் வாசனையை அறிந்து, அதைக் கொஞ்சம் ருசிபார்க்கவிரும்பி, சிறுவனுக்குச் சமீபத்தில் இருந்த அந்த அப்பத்தின்மேல் வந்து உட்கார்ந்தன. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அப்பம் முழுவதும் ஈக்களால் மூடப்பட்டுப் போயிற்று.

"அட்டா! உங்களை யார் இங்கே அழைத்தது, ஓடிப்போங்கள்!" என்று சொல்லி அவைகளை ஓட்டுவதற்காகத் தையற்காரன் அப்பத்தின்மீது கையை வீசினன். ஈக்களுக்கு அப்பத்தைப் பறிகொடுத்து விட்டுப்போக மனமில்லை. அவைகள் திரும்பவும் முன்னையினும் அதிகமாக வந்து மொய்த்துக்கொண்டன.

இதைக் காணவும் தையற்காரனுக்கு அதிக கோபம் வந்துவிட்டது. அவன் தன் இடத்தை விட்டு எழுந்து மேஜையின் கீழிருந்த ஒரு சிறு வஸ்திரத்தை எடுத்து "இவைகளின் பலத்தை இன்று பார்த்துவிடுகிறேன்!" என்று தனக்குத் தானே சொல்லிக்கொண்டு, அந்த ஈக்களை கையில் எடுத்த வஸ்திரத்தால் ஓங்கி அடித்தான். அப்பால் அவன் வஸ்திரத்தை எடுத்துவிட்டுப் பார்த்தான். அநேகமாய் எல்லா ஈக்களும் பறந்துபோய்விட்டன. சில ஈக்கள் மட்டும் மாண்டுபோய், காலைப் பரப்பிக்கொண்டு மேஜைமீது மல்லாந்து கிடந்தன. தையற்காரன் அவைகளை எண்ணிப்பார்த்தான்; ஏழு ஈக்கள் இருந்தன.

(தொடரும்.)

அறிவுவிளக்கக் கதைகள்.

காகம், எலி, ஆமை, மான்—வேடனை வென்ற கதை.

(தொடர்ச்சி.)

புலி:—'நான் வைகறையில் மூழ்கி நித்தியதானம் பண்ணிக் கொண்டிருக்கிறேன்; நகமும் பல்லும்போன கிழவனுயிருக்கிறேன்; இப்போது என்னிடத்தில் நம்பிக்கை யில்லையா? வேட்டல், ஓதல், கொடுத்தல், தவம், சத்தியம், உறுதி, பொறுமை, ஆசையின்மை யென்னும் இவ்வெட்டுத் தருமங்களையும் நான் அறிந்திருக்கிறே னாதலின் இந்த அபூர்வ வஸ்துவை யாருக்கேனுங் கொடுக்க இச்சிக் கிறேன்; இதனால் என்னிடத்தில் நற்குணமிருக்கிறதென்றும் எவ்வ ளவானலும் துர்க்குணமில்லையென்றும் அறியவில்லையா?'

பிராமணன்:—'இது மெய்தான். ஆனாலும் புலி மனிதரை யடித்துத் தின்னுகிறதென்ற லோகாபவாதம் இருக்கின்றதே!'

புலி:—'நான் தருமசாஸ்திரமும் அறிந்திருக்கிறேன்; தன் பிராணன் தனக்கு எப்படித் தித்திப்போ அப்படியே எல்லார்க்கும் இருக்குமென்றறிந்து சாதுக்கள் பிராணிகளிடத்தில் தயையாயிருக் கின்றார்கள். தன்னைப்போலவே சுகதுக்கங்களைப் பிறரிடத்தில் நினைக்கிறார்கள். நீ மிகவும் தரித்திரனாகையால் உனக்குக் கொடுக்கப் பிரயத்தனம் பண்ணுகின்றேன்; சாஸ்திரமும் இப்படியே இருக்கின் றது; ஏழைக்கே கொடுக்கவேண்டும்; செல்வமுள்ளவனுக்குக் கொடுக்கலாகாது. ஏனென்றால், மருந்து நோயாளிக்கு எப்படிக் குணம் கொடுக்குமோ அப்படி நோயில்லாதவனுக்குக் கொடுக்குமா? ஆதலால், நீ இந்த ஏரியிலேயே முழுகிவந்து காப்பை வாங்கிக் கொண்டு வீட்டுக்குப் போ." என,

பிராமணன் (ஐயோ! பிராமணனுக்குப் பின்புத்தியாகையால்) புலியின்பேச்சை நம்பி, ஸ்நானம் பண்ணுகிறதற்கு ஏரியிலிறங்கின வுடனே, உளையிற் புதைந்து காலைப் பிடுங்கிக்கொண்டு வரக்கூடாமல் திகைத்தான்.

புலி அவனைப்பார்த்து "பிராமணா! பயப்படாதே, நானுன்னைச் சேற்றினின்றும் எடுக்கின்றேன்; சற்றிரு" என்று சொல்லிக் கொண்டு மெல்லெனப் போய் அவனைப் பிடித்துக்கொண்டது.

அப்போது பிராமணன் 'துஷ்டர்கள் வேதாத்தியயனம் பண் ணியிருந்தாலுந் தருமசாஸ்திர மறிந்திருந்தாலும் அவர்கள் வார்த் தையில் நம்பிக்கை வைக்கலாகாது. எவன் சுபாவமெப்படியோ அது எப்போதும் போகாது. இப்படி இருக்கையில் நம்முடைய சாதிக்கியல்பாயிருக்கிற பேராசையினால் இந்தத் துஷ்டனிடத்தில் விசுவாசம் வைத்து, மோசம்போனேம்' என்றிப்படி எண்ணிப் பச்சாத்தாபப்பட்டுக் கொண்டிருக்கையில் அந்தப் புலி அவனைக் கொன்று தின்றது. (தொடரும்.)

ஸ்திரீகளுக்கான கதை.

பொறாமை கூடாது. (தொடர்ச்சி.)

இந்த மறுமொழிகேட்டு, ராணி மகிழ்வாள். கொஞ்சநேரம் சென்று, புதிதாய்த் தன்னை அலங்கரித்துக்கொண்டு, கண்ணாடியின் கிட்டப்போய் முன்போலக் கேட்க, அதுவும் முன்போல பதில் சொல்லும். கண்ணாடி மாயக்கண்ணாடியானதால் அது பொய்பேசுவ தில்லை.

செண்பகவல்லிக்கு வயசு ஏழு. அப்போதே அவள் வெகு அழகான குழந்தை. வயசு ஆக ராணியைக் காட்டிலும் அதிக சௌந்தர்யவதி ஆவள் என்று ஜனங்கள் சொல்ல ஆரம்பித்தார்கள். இந்தப் பேச்சு ராணியின் காதில் விழுந்தது. ஒருவேளை அது நிஜமாயிருக்குமோ என்று பயந்து மாயக்கண்ணாடியின் கிட்டப்போய்த் தான் யாவரையும்விட அழகுதானு வென்று அதைக் கேட்டாள்.

கண்ணாடி; அழகிய ராணியே, உன் லக்ஷணம் அதிகமென்பதற்குத் தடையில்லை; ஆனால் உன்னைக்காட்டிலும் அழகாய் இருப்பாள் செண்பகவல்லி.

இதைக் கேட்டவுடன் ராணிக்குக் கோபம் அதிகமாகி, செண்பகவல்லிமேல் பொறாமை உண்டாய், அவளை எந்தவிதமாவது தீர்த்துவிடவேணுமென்று தீர்மானித்தாள்.

ஒருநாள் ராணி ஒரு வேடனை வரவழைத்து "செண்பகவல்லியை உன்னுடைய காட்டுக்குக் கொண்டுபோய் அவளுடைய உயிரை சரிப்படுத்திவிடு; அவள் பிராணன் போய்விட்டதென்பதை ரூபிக்க எனக்கு ஏதாவது ருஜு கொண்டுவா. உனக்குத் தேவையான அளவுக்குப் பணம் தருவேன்" என்று சொன்னாள்.

அப்படியே செய்கிறேன் என்று தாழ்மையாய்ச் சொல்லிவிட்டு, செண்பகத்தை அழைத்துக்கொண்டு வேடன் தான் வஸித்துக் கொண்டிருந்த ஆரண்யத்துக்குத் திரும்பினான். என்ன காட்டாளாயிருந்தாலும், பக்ஷியையும் மிருகங்களையும் கொல்லவதே அவனுடைய தொழிலாயினும், செண்பகவல்லியைக் கண்டவுடன் அதிக பச்சாத்தாபமுண்டாகி, அவளை ஹிம்ஸிப்பதில்லையென்று தீர்மானித்தான். ஆனாலும் அவளைத் தனக்குச் சமீபத்தில் வைத்திருக்கப் பயந்து, எங்கேயாவது காட்டுக்குள் ஓடிப்போ என்று அவளை அனுப்பிவிட்டான். அவள் போவதற்குமுன், அவள் உடுப்பில் ஒரு பெரிய துண்டைக் கிழித்து, ஒரு ஓநாயைக்கொன்று, அதன் இரத்தத்தில் அந்தத் துண்டைத் தோய்த்து ராணியிடத்தில் கொண்டுபோய்க் காட்டி இனம் வாங்கிக்கொண்டான்.

(தொடரும்.)

பொதுக் கதைகள்.

லோபி (தொடர்ச்சி.)

இராஜ்ய விஷயமாகவாவது, இதர விஷயமாகவாவது, அவன் தனது ரகஸ்யமான பொக்கிஷ அறையைவிட்டு வெளியிலிருக்கையில் மிக்க விசன காலமென அதைக் கருதுவான். பொக்கிஷ அறையைத் தவிர வேறெந்த இடமும் தனக்குச் சந்தோஷத்தைக் கொடுப்பன வல்லவென்று சொல்லுவான். இவ்வறையில் கதவைத்தாளிட்டுக் கொண்டு, பணப்பை, பொன்தட்டு, பொன்கட்டி ஏதாவதொன்றைக் கையிலேந்திவந்து அவனறைக்கு வெளிச்சத்துக்காக வைக்கப்பட்ட ஜன்னலண்டை வந்து நின்று அதன் வழியாக உட்புகும் சூரியகிரணத்தில் அதைக் காட்டி அதன் ஜ்வலிப்பைக் கண்டு சந்தோஷப் படுவான்.

அவன் சூரியகிரணம் உபயோகமுள்ளதென்று நினைத்தான். ஏனெனில், அதில்லாமல் பொன் ஜ்வலிக்காது. கையிலுள்ள நாணயங்களை எண்ணுவான், பொன் கட்டிகளை மேலே வீசி அது கீழே விழாது கையிலேந்துவான்; இராவப்பட்ட பொன் தூள்களைக் கையில் வாரியெடுத்து விரல் சந்துகள் வழியாய் விழச்செய்வான். பொன் பாத்திரங்களில் தன் முகம் பிரதிபலிப்பதைக் கண்டு களிப்படைவான். "ஏ! குபேரா! மகாலோபி! உனக்கிணையாக பாக்கியத்தில் யாரைக் கூறமுடியும்?" என்பான். ஆ! இவன்போல் பேதையுமுண்டோ? மகாலோபி தான் மிக்க சந்துஷ்டியுள்ளவன் என்று சொல்லிக்கொண்டாலும், தான் எவ்வளவு சந்துஷ்டியடைய முடியுமோ அவ்வளவு இன்னும் அடையவில்லை என்று நினைத்து ஏங்குவான். அவன் உலகத்திலுள்ள பொருள் யாவையும் அவன் சுதந்தரத்துக்குள் வந்து அவன் பார்க்குமிடமெல்லாம் பொன்மயமாயில்லாவிட்டால் அவன் இன்பம் முடிவுபெற்றதாகாதென்று நினைத்தான்.

(தொடரும்.)

பூனை நண்பன்.

(தொடர்ச்சி.)

நகர்ப்புறத்தில் மூன்று மைல் தூரத்திற்கப்பாலுள்ள பழைய அரண்மனையில் மூவரும் தங்கிச் சாப்பிட்டபின், அன்று தொடங்கிச் சரியாய் முந்நூற்றறுபத்தைந்து நாள் ஆனதும் அதே இடத்தில் வந்து கூடி ராஜசமூகத்திற்கு ஒன்றாய்ப் போவதாக ஒப்பந்தம் பண்ணிக்கொண்டனர். இன்னும் அவர்கள் தங்களை இன்னாரென்று பிறர் அறியாதபடி பெயர்களை மாற்றிக்கொள்வதாகவும் தீர்மானித்துக்கொண்டனர். பின் ஒருவரிடத்தில் ஒருவர் சொல்லிக்கொண்டு மூவரும் வெவ்வேறு மார்க்கமாகப் போயினர்.

இந்தக் கதையில் கடைசிக்குமாரன் செய்த பிரயாணத்தைப் பற்றித் தான் நாம் சொல்லப்போகிறோம். அவன் உலகத்திலுள்ள மற்ற அரசகுமாரர்களெல்லாரையும் விட அழகில் சிறந்தவனாயிருந்ததோடு சாமர்த்தியத்திலும் மிச்சமாயிருந்தான்.

அவன் ஊர் ஊராகப் போய்க்கொண்டிருக்கும்பொழுதே, வழியில் கண்ட நாய்களுள் அழகாயிருந்தவைகளை யெல்லாம் விலைக்கு வாங்கினான். கடைசியாகத் தான் இதுவரை பார்த்த எல்லாவற்றினும் அழகிற் சிறந்த நாயைக் கண்டவுடனே, அவன் மற்ற நாய்களை யெல்லாம் கொடுத்துவிட்டான். அவன் வாங்கிய நாய்களை யெல்லாம் வைத்துக்கொண்டிருப்பானாயின், அவற்றைப் பாதுகாக்க இருபது வேலைக்காரர் வேண்டியிருக்குமே.

கடைசியாக, தான் போவது இன்ன இடமென்று தெரியாமல் அலைந்துகொண்டே, ஒரு பெருங்காட்டின் நடுவில் போய்விட்டான். திடீரென்று பொழுதும் பட்டு, இடியும் மின்னலும் மழையும் பயங்கரமாக வந்தது. இவையெல்லாம் போதாவென்று பிள்ளையாண்டானுக்கு வழியும் தெரியவில்லை.

நெடுநேரம் அலைந்து திரிந்தபின் இந்த அரசகுமாரன் ஒரு வெளிச்சத்தைக் கண்டான். கண்டதும் பக்கத்தில் ஏதோ வீடு இருக்கவேண்டுமென்று இவன் மனதிற் பட்டது. அந்த வெளிச்சத்தை நோக்கிக்கொண்டே முன்சென்றான். கொஞ்ச நேரத்திற்கெல்லாம் தான் இதுவரை கண்டறியாத திவ்ய அரண்மனை வாயிலில் நின்றான்.

(தொடரும்.)

கடனும் வீண்விரயமும்.

ஆனமுதலி லதிகம் செலவானல் மானமழிந்து
மதிகெட்டுப் போனதிசை—எல்லார்க்கும்
கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய் நல்லார்க்கும்
பொல்லனாம் நாடு.

இந்திய மக்கள் தரித்திரமடைந்து அநேக கஷ்டங்கள் அனுபவிப்பதற்கு (பல காரணங்களுண்டெனினும்) கடன் படுதலும் வீண் விரயம் செய்தலும் முக்கிய காரணமாகும். எக்காரணத்தைக் கொண்டும் கடன்படுதல் மிக்கத் தீது. இது கொஞ்ச மஜாக்கிறதையாயிருந்தால் வளர்பிறைச் சந்திரனைப்போல் வளர்ந்து முடிவில் வறுமைக் கடலி லாழ்த்திவிடும். கடன்பட்டபின்னர் ஜாக்கிரதையா யிருப்பதைப் பார்க்கிலும் கடன்படுமுன்னரே கொஞ்சம் ஜாக்கிரதையாயிருந்தால் அம்மஹா மாயவலையிலிருந்து விலகிவிடலாம். இத் துன்பங்களெல்லாம் பெரும்பாலும் அறிவின்மையாலேற்படுவதே. கைப்பொருளில்லையானல் கூலித்தொழில் செய்து வயிறு வளர்க்கினும் வளர்க்கலாம்; கையகலவேங்கி உண்ணினும் உண்ணலாம்; பசிப்பிணியால் இறக்கினு மிறக்கலாம். இவைகளால் அவமானமில்லை ; இவைகளினல் பிறர்க்கு யாதொரு கேடுமில்லை ; இவைகளினல் துன்பமுண்டாயினும் அத் துன்பம் மிகச்சிறிதே ; அச்சிறு துன்பமும் நல்லறிவோடமைந்து சிந்திக்குங்கால் நீங்கிவிடும். ஆனல், கடனே கொடிது கொடிது மிகக் கொடிது. பெருவியாதி முதலிய கொடிய நோய்களினு லுண்டாகுந் துன்பத்தைப் பொறுக்கினும் பொறுக்கலாம். கடனல் உண்டாகுந் துன்பத்தைப் பொறுத்தலரிது. கடன்படக் கூசாதார் பொய்சொல்லக் கூசார். பொய்ப் பத்திரம் கற்பிக்கக் கூசார். பொய்வழக்கு பேசக் கூசார். விசுவாசகாதகஞ் செய்யவும், களவு கொலை செய்யவும், வழக்குத் தீர்ப்பிலே பரிதானம் வாங்கவும் கூசார். கடன்படல் எல்லாப் பாவங்களையும் வலிந்து கைப்பிடித்தழைக்குந் தூது. கடன்வாங்குபவர் தனிகனை (கடன் கொடுப்பவனை)த் தாயைக் கண்டாற்போலப் பேரானந்தத்தோடு கண்டு அவனிடத்தே கடன்பட்டு பின்பு அவன் எதிர்ப்படும்போது அவனைப் பேயைக்கண்டாற்போலப் பயத்தோடு கண்டு நடுநடுங்கி ஓடி ஒளித்தொழிவர். வாணிகஞ்செய்ய விரும்புவோர் இயன்றமட்டும் கைப்பொருளைக்கொண்டு செய்வதே யுக்தம். கடன் சொல்லிச் சரக்குகளை வாங்கி வியாபாரஞ் செய்யமுயன்றால், கடன்

கொடுப்பவன் வட்டிவாசிகளை அச்சரக்கின் விலையோடு சேர்த்தே கொடுப்பான். அவ்வாணிகம் தலையெடுக்காது. கைப்பொருள் சிறிதும் இல்லாதவர் நிலத்திற்கென்றும், கலப்பைக்கென்றும், விதைக்கென்றும், இறைக்கென்றும், மாட்டுக்கென்றும் கடன்பட்டுப் பயிர்த்தொழில் செய்கிறார்கள். கடன் கொடுத்தவர்களெல்லாரும் அறுப்புக்கெல்லாம் வந்து ஒன்றுக்கு இரண்டாக அளந்து கொண்டுபோகத் தாங்கள் போசனத்துக்கு முட்டுபட்டு வருந்துகிறார்கள். கடன் வாங்குபவர் தான் கடன் படுமுன்னர் அது அத்தியாவசியமானதா? அப்படி வாங்கினால் அதை திருப்பிக்கொடுக்க சக்தியுண்டா? அல்லது அதற்குத்தகுந்த ஆஸ்தி யல்லது பொருள் உண்டா? கடன்கொடுக்கத் தாமதப்பட்டால் கொள்முதல் அதிகமாய்விடுமே. இப்பொழுது இப்பணத்தொகை ஆவசியமேயாயினும் கடன்படாத நம்முடைய தாவரசங்கமப்பொருள் சிலவற்றில் விற்கிரயஞ்செய்தே செலவழிக்கலாமே? இப்படிச் செய்வதினால் வட்டி மிஞ்சுமே என்று முன்பின் நன்றாக ஆலோசிக்கக்கடவர். இப்படிச் செய்யாதார் வட்டிமுதலதிகமாய் கொடுக்கப்பட்டு சாத்தியமற்று கடன்கொடுத்தவனால் வழக்குத் தொடுக்கப்பட்டு அவமானமடைந்து வாரண்டு, சம்மன் முதலானவைகள் வரும்போது ஓடியொளிந்து ஏங்கி யாதொருவழியுமில்லாமல் மெலிந்து உருகக்கடவர். இக்காரணங்களினால் அவர் பொய் களவு முதலிய மேற்கூறிய குற்றங்களுக்கு ஆளாகி இம்மையிலும் மறுமையிலும் கடுந்துன்பத்தை யனுபவிப்பர். தற்கால நாகரீகமும் அதற்கிசைந்தாற்போல் பெரும்பாலும் வீண்வியயத்தை அதாவது அநாவசியமான செலவை யுண்டாக்குகிறது. இது கடனுக்கு பிரதானமான காரணம். அவசியமான செலவுகளைப்பற்றி நாம் யோசிக்க வேண்டுவதில்லை. அநாவசியமான செலவுகளைப்பற்றி சிறிது யோசிப்போமாயின் நம் தேசம் அநேகமாய் முன்னுக்குவந்து உண்மையான செலவுகளுடன் எவ்வளவோ சிக்கனம் ஏற்பட்டு பொருள் சேகரிக்கக் கூடுமென்பது உள்ளங்கை நெல்லிக்கனியைப்போல் விளங்கும். (எத்துணை பெருஞ் செல்வந்தராயினும் கடன்படத் தலைப்படுவோர் விரைவிலே தங்கள் செல்வமெலாமிழந்து வறுமையென்னும்வாரகவி பாடுமிடிமையாளராவர்). இக்காலத்தில் மிகச் சொற்பவரும்படியுள்ளவரும் அதிகமாய் வீண்செலவு செய்கிறார்கள். சாதாரணமாய் 8 ரூபா வரும்படியுள்ள ஒரு குடும்பஸ்தன் தன் தாய் தந்தை மனைவி மக்கள் முதலிய உறவினரை சம்ரக்ஷிக்கவேண்டியவனாயிருக்கத் தனக்கு மேற்பட்ட 20 ரூபா சம்பளத்தையுள்ள ஒருவர்

செலவு செய்வதைப்போல் செய்ய எத்தனித்தால் மிடிமை யாரைக்
கேட்டுவரும். "சந்தடிசாக்கில் கெந்தப்பொடி............................"
யென்பதுபோல டால் டமாரம் போட்டுக்கொண்டு கடனோடு கடன்
என்றுசொல்லி ஆரவாரமாய்க் கலியாணம் செய்பவரும், வண்டிவாக
னமேறுபவரும், ஆடையாபரணங்கள் தரிப்போரும் பின்னர் இன்பம்
நுகருபவரைப்பார்த்து ஏங்கிப் பெருமூச்செறிந்து உருகுவர். தாங்
கள் துன்பக்கடலில் மூழ்கி பிறருக்கு இன்பத்தை கொடுக்கும் இவர்
களின் ஜீவகாருண்யமென்னே! ஒரு கிராமத்திலிருந்து நகரத்துக்கு
சாமான்வாங்க ஒருவன் போவானாகில் வீட்டுச்சாமான் செலவுவரை
யில் செய்துகொண்டு மிகுந்திருந்தால் மற்ற முக்கிய செலவுகளுக்கு
உபயோகிக்கலாம். இல்லாவிடில் சேர்த்துவைக்கலாம். அப்படிக்கி
ன்றி தற்கால மேதாவிகளோ காபிஹோட்டல், டிராமா, மதுபானம்
முதலியவற்றில் வீணே செலவழிக்கத் தூண்டப்பட்டு மூதேவிக
ளாகிறார்கள். இவைகளியற்கையா யமையாவிடினும், செயற்கைவாச
னையினாலும் கெடுதல் ஏற்படுகிறது. காபிகிளப்புக்குப் போனாலோ
பசியினிமித்தம் ஒருஅணா மதிப்புடன் செலவழிக்க எண்ணங்கொ
ண்டு உட்சென்று, இட்டிலி அல்லது ஏதோ தின்பண்டம் கேட்டால்
அவர்கள் இரண்டு அணாவரையில் கொண்டுவந்து வைத்துவிடுகி
றார்கள். நமக்குள்ள சபலசித்தம் தட்டாமல் வாங்கிக்கொண்டு
1 அணா மதிப்பு சிலவேளை 4 அணா 6 அணா வரையிலுங் கூட
செலவாய்விடுகின்றன. இதனால் காப்பிக்கு ஓட்டலுக்குப் போகக்
கூடாதென்பதல்ல. நாம் செலவுசெய்ய வேண்டிய திட்டப்படி
மேன்மையானதாய் விரும்பிச் செலவிடலும், மதுபானமும் அனா
வசியமான செலவேயாகும். எத்துணை பெருஞ் செல்வந்தராயினும்
கடன்படத் தலைபடுவோர் விரைவிலே 'தங்கள் செல்வமெலா
மிழந்து வறுமையென்னும் வரகவிபாடும் மிடிமையாளராவர்.

சுருக்கிக் கூறுமிடத்து அநேக விதமாய் நமது பொருள்கள்
வீணில் விரயமாகி அழிவதுமில்லாமல் கடனுமேற்படுகிறதை அனு
பவித்தோர் பிரத்தியட்சத்தில் அறிகிறார்கள். பொருள் செலவுகளு
டன் நில்லாது இவற்றிற்கனுகூலமாக மனம், வாக்கு, காயம் மூன்
றும், வீணில் செலவாகின்றதும் யோசித்தால் நன்கு புலப்படும்.

K. S. ABDUL WAHAB SAHIB,
Hasthampatti,
Main Road, Salem.

விவசாயம்

விவசாயமென்பது உழவுத்தொழில்செய்து பயிர்வித்திட்டு நன்புலன்முயன்றுகாப்பது. இதுவேளாண்மை, கிருஷித்தொழில் என்றும் கூறப்படும். ஒருவன் வேளாண்மைத்தொழில் செய்து வாழ்வானாயின் அவனே மற்றெல்லோரினும் அதிக மனோவுற்சாகமும், தேகவன்மையும், ஆரோக்கியமும் பெற்றவனாவன். வேளாண்மைத்தொழில்செய்யும் ஒருவன் ஒருவருக்கும் கைகட்டி வாய்புதைத்து அடங்கவேண்டியதில்லை. உலகத்திலே எத்தொழிலினும் வேளாண்மையே சிறந்தது. ஏனென்றால், நாம் முதலில் கூறியபடி அவன் ஒருவருக்கும் அடிமையாயிருக்கவேண்டியதில்லை. அவனை ஒருவரும் குற்றம்சொல்ல முடியாது. மற்றையத்தொழில்களிலோ நாம் எஜமானனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். அவன் சொன்னவைகளை யெல்லாம் அக்குறித்தகாலத்தில் தவறாது செய்தல் வேண்டும். ஏதாவது சிறிது பிழை நாம் செய்துவிட்டாலோ அதன் பொருட்டு அவன் நம்மீது குறைகூறி நம்மைத் துன்புறுத்துகின்றான். விவசாயத்தொழில் செய்பவனுக்கோ அவ்விதமான செய்கைகளொன்றுமில்லை. அவனைக்கேட்பாரொருவருமில்லை. அவன் காலையில் எழுந்து மண்வெட்டி கலப்பை முதலியவைகளை எடுத்துக்கொண்டு, எருதுகளைக் கழனிக்கு ஓட்டிச்சென்று, அவ்வெருதுகளை ஏரில்பூட்டி உழுகின்றான். அவன் எட்டுமணிவரையிலும் அவ்விதமே உழுதுகொண்டிருக்கின்றான். பின் அவன் எருதுகளை ஏரினின்றும் அகற்றி ஓர் ஓடையிலோ, குளத்திலோ, அல்லது ஆற்றங்கரையிலோ கொண்டுபோய் அவ்வெருதுகளை நன்றாய்த் தேய்த்துக் குளிப்பாட்டிவிட்டு, தானும் குளித்துவிட்டு, வீட்டிற்குவந்து உண்டி உட்கொண்டு சிறிதுநேரம் உட்கார்ந்து இளைப்பாறுகின்றான். பின் அவன் மத்தியானப்போஜனம் சாப்பிட்டுவிட்டு, இளைப்பாறி, சாயங்காலத்திலும் வெளியில் சென்று கழனிகளையெல்லாம் சுற்றிப்பார்த்துவிட்டு இரவில் வீட்டிற்குத்திரும்பிவந்து உணவு அருந்திப் பிறகு துயில்கொள்கின்றான். இவ்விதமே அவன் நாள்தோறும் செய்வதனால் அவனுடைய சரீரம் ஆரோக்கியத்தை அடைகின்றது. வன்மையைப்பெறுகின்றது. அதனால் அவனை ஒருவரும் குற்றஞ்சொல்லமுடியாது. இதனாலேதான் "உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர்பணிக்கு" என்றும் "தொழுதூண் சுவையின் உழுதூணினிதே" யென்றும் நமது மூதாதையர்கள்

கூறியுள்ளனர். விவசாயத்தொழில் செய்பவனே மிகுந்த கொடையாளியாயிருப்பான். மற்றையவர்களெல்லாம் தங்கள் கையில் பொருள் வைத்திருந்தால்தான் கொடையாளியாயிருப்பார்கள். விவசாயத்தொழில் செய்பவனே நினைத்தபோதெல்லாம் கொடையளிக்க வல்லவன். "மேழிச்செல்வம் கோழைபடாது" என்றபடி அவனுடைய செல்வம் என்றும் அழியாது. வேளாளர்கள் அரசருக்குச் சமமாகவும் கூறப்படுகின்றனர். வேளாண்மைசெய்பவன் உலகத்தையே காப்பாற்றியவனாகின்றான். எவ்வாறெனில் அவன் சர்வ வல்லமையுமுடைய சர்வேஸ்வரனால் மேகத்தின் மூலமாய்க் கொடுக்கப்படுகின்ற தண்ணீரினால் பயிரிட்டு உலகத்தவர்களுக்கெல்லாம் உணவுக்கு மிகவும் இன்றியமையாததாகிய நெல்லைக் கொடுக்கின்றான். இவ்வளவு சிறப்பாகிய இத் தொழிலைவிட்டு இக்காலத்திலே அநேகர் ஒருவன்கீழ் அடங்கியிருந்து ஊழியம்செய்யும் உத்தியோகம் என்னும் இருவான தொழிலை விரும்புகின்றனர். அல்லது, முழுச்சோம்பேறிகளாய்ச் சாப்பிட்டுவிட்டு "உண்பதும் உறங்குவதுமாய் முடியும்" என்றபடி யிருக்கின்றனர். விவசாயத்தொழிலே ஒருவனை உலகத்தில் சர்வசுதந்திரத்துடனும் நடமாடச்செய்யவல்லது. ஒரு நாட்டிற்குச் சுதந்திரத்தைக் கொடுக்கக்கூடியதும் அதுவே. ஆகையால் இனிமேலாவது இந்நாட்டிலுள்ளவர் நமது மூதாதையர் செய்துவந்த விவசாயத்தின் பெருமையையறிந்து அவ்வ[illegible]ணமே ஒழுகும்படி எல்லாம்வல்ல இறைவன் அருள் பாலிப்பா[illegible]

சுப்பையா அவர்கள்.

முந்துங்கள்! முந்துங்கள்!!

அமெரிக்கன் எலக்டிரிக் காரட்கோல்ட் மோதிரங்கள்.

இஷ்டமான ரகத்தை பெற்றுக்கொள்ளலாம். இவ்வழகிய மோதிரங்களில் வெள்ளை, பச்சை, நீலம், சிகப்பு, கோமேதகம், வைடூரியம் என்னும் இமிடேஷன்கற்களைபுதைத்து பலவித சித்திரங்களுடன் படத்தில் காட்டியபடி தயார் செய்து ஜர்மனியிலிருந்து வரவழைக்கப்பட்டிருக்கின்றது

மோதிரம் 1-க்கு ரூபா 2-0-0

மோதிரம்3-க்கு ரூபா5—8—0

ஞாயிறு செய்யும் வஞ்சகம்.

சூரியன் கொடிய வஞ்சகன் பல பெரிய உண்மைகளையெல்லாம் நாம் அறியவொட்டாது தனது ஆற்றலையும், புகழையுமே காட்டித் தருக்கித் திரிதருகிறான். அறியாச் சிறு குழந்தையின் கையிற் பழங்காட்டிக் கழுத்திற் பொன் திருடும் தீயன் போன்றான் இவன்.

ஆயின் நல்லது செய்பவன் போலவே தோன்றுகிறான். அவன் காலை கிழக்கில் எழுதற்கு முன்னேயே குழம்பிய வெளிச்சமொன்றை அனுப்பிவிடுகின்றான். அவ் வெளிச்சமே பல பொருள்களைப் புலனாக்குகின்றது கண்டு 'ஆ! ஞாயிறு இன்றி என்ன இடர்ப்பட்டோம்' என்கின்றோம். அதன் பின்னேயே தானும் தனது ஒள்ளிய உருண்டை மேனியோடு மேற்கிளம்பி ஞாலங்கொண்ட எல்லாவற்றையும் நயனங்கட்கு இனிது வெளிப்படுத்துகின்றான்.

மரகதப் பட்டாடை விரித்ததுபோன்று, பச்சைப் பசேரென்று அழகில் வளர்ந்த அருகப்புற்களின் நுனிகளில் பனிநீர்த்துளிகள் பலநிறஞ்சிவணி மிளிர்தருவதைக் கண்ணுற்று இன்பமெய்துகின்றோம். நறுவிய மலர்கள் கவின்றரும் இதழ்களை அகல விரிக்க இனிய மணமும், இன்ப எழிலும் விரவி விரவி வாரி மடுத்து மனம் மலர்கிறோம். இயற்கை ஓவியம் வரைவதில் கைபோய ஆற்றல் வாய்ந்த [illegible]னும் கருதவொண்ணா வனப்பமைந்த பட்டுப்பூச்சுகள் இங்கென அங்கெனச் சிறகு விரித்துலவுதலை வாய்ப்பிளக்கப் பார்த்து உள்ளம் பூரிக்கின்றோம். ஒலிநயச் சுவைபிலிற்றும் மெல்லிய குரல்வாய்ந்த கோகிலம் முதலிய புள்ளினங்கள் பொதும்பரில் சிவந்த 'பசுந்தளிர் மரக்கிளைகளில் அழகிலமர்ந்து வால் குழைத்து இனிய ஓசை மிழற்றுவதைச் செவிமடுத்து மெய்ம்மறக்கின்றோம். ஞாலமே இன்ப வடிவாகக் காண்கின்றது. இம்மட்டோ?

இயற்கை ஆனந்தம் நுகர்ந்து திளைத்து இங்குமங்குஞ் சென்று தொழில் புரியத் தொடங்குகின்றோம். உறவற்றாரை, உறவுகொள்கின்றோம். நமதல்லப் பொருள்களை நமதாக்க முயல்கின்றோம். இது நம் வீடென இல்லத்தை நலம்படுத்துகின்றோம். இது நம் நிலமென பூமியைத் திருத்தி உழவு செய்கின்றோம். இது நம் பொருளெனப் பற்றுமிகுகின்றோம். இது பிறரதென்று உன்னிக் கவலை தாழ்கின்றோம். விடிந்தது முதல் ஞாயிறு படும்வரை நாம் உலகில் இனிது வாழ்தற்குரியன பலவும் தேடிச் சேமிக்கின்றோம்.

'உலகந்தான் யாவும், நாம் 'நலம்பட இருத்தற்கேற்ற வெல்லாம் இங்குத் தான் குவிந்திருக்கின்றன' என்று உள்ளம் நிறைகின்றோம். 'இன்னுஞ் சற்று இவ்வெயில் காயின் இன்னும் பல செயலியற்றிப் பயன் பெறுதற்காமே' என்று ஞாயிற்றின் பிரிவுக்கு ஏங்கிவருந்துகின்றோம்.

அந்தோ! என்ன ஏமாற்றம்!! இரவி எத்துணை வஞ்சகஞ் செய்துவிட்டான்!! 'இயற்கை வனப்பெல்லாம் இனிக்கக் காட்டி இம்மை நலமெல்லாம் இனிது ஆக்கவல்ல பகலவனை வஞ்சகன் என்று கூறுதல் தகுமா?' என்று எண்ணக்கூடும். சிறிது ஆராய்வோம்; கரவாடும் வன்னெஞ்சனே அவன் என்பது நன்கு வெளியாய்விடுகின்றது. அவன் மறையட்டும் பிறகு காணலாம் விந்தையை அத்தீயோன் மேற்குக்கடலில் மூழ்கினான் என்றறிந்ததும் ஒள்ளிய விண்மீன் ஒன்று வானத்தில் மிளிர வாரம்பிக்கின்றது. சிறிது நேரத்திற்கெல்லாம் இன்னும் எத்துணையோ அத்தகைய ஒளிப் பொருள்கள் அகன்ற வாகாயத்தின்கண் பொலிதரத் தொடங்குகின்றன. அவற்றை எண்ணல் இயலுமா? ஓ! ஓ! கடல் மணலை எண்ணினாலும் எண்ணலாம்; இவையாவும் வெய்யோன்முன் தலைகாட்டாது ஒளித்திருந்தன. இம் மீன்களை ஏற்ற கண்ணாடிகள் கொண்டு நோக்கின் அம்மம்ம! அவை ஒவ்வொன்றும் நமது பூமியைப் பார்க்கினும் பன்மடங்கு பெரியவைகளாகக் காண்கின்றன. கோடிக்கணக்கான இவ்வண்டங்கண்முன் நமது பூலோகம் எங்கே? இன்னுங் கூர்ந்து நோக்குழி இந்த உலகங்களெல்லாம் குறித்த முறையாக ஒன்றை மற்றொன்றும், ஒன்றைப் பலவும், ஒவ்வொன்றும் தானேயுமாக ஓயாது சுழன்றுகொண்டிருக்கின்றன வென்றறிகின்றோம். 'இங்ஙனம் இவைகளை இயக்கிவைத்த பெருமான் யார்?—யார்?' என்று உள்ளம் ஓடுகின்றது. எதற்காகவோ இவற்றைப் படைத்தாரென்று எண்ணம் ஆழ்கின்றது. நமது உலகப்பொருள்களை நாம் இனிது வாழப் படைத்தார் என்றறிந்துவிட்டோம். ஆயின் இத்துணை அண்டங்களை யாருக்கு என்ன பயன்தர உண்டாக்கினார். கடவுள் என்று அறியக் கூடாது திகைக்கின்றோம்.

இறைவனது படைப்பை இத்துணை விரிவிற் கண்டதும் இச் சிறு உலகத்தைப்பற்றிய உயரிய எண்ணங்களெல்லாம் உள்ளத்தை விட்டு அகல்கின்றன. இஞ் ஞாலவாழ்க்கை நீரிற் குமிழிபோன்றது என்றும், இப் புல்லிய உலகம் கடப்பின் இன்பந்தரும் உலகங்கள்

எத்தனையோ உள்ளனவென்றும் பெரியோர் கூறியுள்ளவெல்லாம் நினைவில் தோன்றுகின்றன. இப்புவியை விடின் வேறு பல இன்ப விடங்களையும் அவற்றிற்கெல்லாம் ஆதியாய கந்தழியையும் கண்டு களித்தல் கூடும் என்ற எண்ணம் நிகழ்கின்றது. இறத்தல் என்பது சிறிதும் வருத்தங்கொண்டதாகக் காணவில்லை. உயிர் நீப்பின் நல்லன பல பெறலாம் என்னும் அவா ஊறுகின்றது. ஆனால்—

பொழுது விடிந்ததும் எல்லா எண்ணங்களும் எப்படியோ பறந்துவிடுகின்றன. உலக இன்பங்களைக் காணக்காண 'ஆ! ஆ! இவற்றையெல்லாம் நுகரத்தான் கடவுள் நம்மை இங்குப்படைத்தான் போலும்' என்ற பற்று நம்மை உலகப்பொருள்களோடு பிணித்துவிடுகின்றது. சாதல் எனின் 'ஐயையோ!' என அஞ்சுகிறோம். இரவில் விண்மீன்கள் முன்னமர்ந்து இறத்தல் இனிமைதரும் என்று எண்ணியவெல்லாம் எங்கோ போய்விடுகின்றன. எல்லாம் சூரியன் செய்த மாற்றம்!

சூரியன் நமக்கு வேறுவகையில் செய்யும் உதவிகளுக்கு நாம் பெரிதும் நன்றிபாராட்ட வேண்டியவர்களே. எனினும், அவனது வஞ்சகத்தை மறத்தலாகாது. இத்தனை நாளாக நாம் அவனை நன்கு அறியாதிருந்தோம்; ஆராய்ந்த பின்னரன்றோ உண்மை வெளியாகின்றது! இரவு இருள் துதைந்திருப்பினும் நமக்கு எத்தனைப் பெரும்பொருள்களைக் காட்டி அறிவுதந்தது. இறப்பும் அங்ஙனஞ் செய்தல் கூடும். ஆகவே நாம் ஞாயிற்றின் வஞ்சனையால் உலக பந்தம் பொருந்து 'இறத்தல்—அந்தோ!—துன்பம்' என்று எண்ணி வெருவுறோமாக.

இராமலிங்க முதலியார்.

வெகு நயம்! சீக்கிரம் முந்துங்கள்!

கையில் அழுத்தும் ஷ்பிரிங் விசிறி.

இவ்விசிறியானது சுபகாரியங்களிலும் பொதுஜன கூடங்களிலும் பெட்ரூம்முதலியகாற்று வசதியில்லாமல் கஷ்டபடும் காலத்திலும் இதை பெரியவிரலில் அழுத்தினால் சுழன்று மனத்திற்கு ஆனந்தப்பரவச காற்று தருவது இதுவே. விலை. 1க்கு ரூபா 3-0-0

½ டஜன் அல்லது 3 விசிறி விலை ரூபா 8-8-0

விலாசம்:—N. T. ஜீவா அண்டு கம்பெனி,
1-382, தங்கசாலை தெரு, சென்னை.

பகவத்கீதா வசனபூஷணம் தொடர்ச்சி.

ந;மதாதீரத்தில் மாயிழமந்திரபுரத்தில் வசிக்கும் மாதவனென்கிற பிராமணன் யாகம் நடாத்த முயலுகையில் கீதா ஒன்பதாமத்தியாயப் பிரபாவத்தால் காலபுருஷனிடத்திருந்து உண்டான நீச்புருடனையும் ஸ்திரீயையும் அந்தத் தானம்வாங்கிய பிராமணன் செயித்தானென்று சொல்லக்கேட்டு தானும் கீதா ஒன்பதாமத்தியாயப் பாராயணஞ்செய்து அந்த ஆட்டுடன் மோக்ஷமெய்தினான்.

கீதையின் பத்தாமத்தியாயத்தின் பாராயணத்தால் தீரதி என்னுமந்தனனுக்கு விசுவேசர் பணிவிடைசெய்ததும், அன்னபட்சி சாபம் நீங்கியதும், தூருவாசர் சாயத்தினால் கமலமுகி பஞ்சபதுமமாகியதனை சுவாசித்த அறுபதினாயிரவரும் முத்தியடைந்ததோடு அவரும் முத்தியடைந்தனரென்றும் பருங்கிமஹரிஷிக்கு விசுவேசர் கூறப்பட்டது.

பிரணிநதிக்கரையின்கணுள்ள மேதலகிப்பட்டணத்து ஆலயத்தில் வசிக்கும் சுனந்தரென்பவர் கீதா பதினோராமத்தியாயப்படனஞ் செய்து நித்தியஜீவன் முக்தராய் வாழுநாளில் அவரெதிற்பட்ட இராக்ஷதனொருவன் அவரை விழுங்கவருஞ்சமயம் கீதா பதினோராமத்தியாயப் பாராயணஞ்செய்ய அவனும் அவனால் விழுங்கப்பட்டிருந்தவர்களும் மோக்ஷமெய்தினார்கள்.

கோலவபுரியின்கணுள்ள சித்தசமாதியென்னும் அந்தணர் கீதையின் பனிரெண்டாமத்தியாயப் பாராயணத்தினால் ஓரரசகுமாரன் விருப்பப்படி தேவர்களால் அபகரிக்கப்பட்டிருந்த யாகக்குதிரையை வரவழைத்தளித்து இறந்துபோன அவனது பிதாவையும் எழுப்பி அவனையும் மோக்ஷமடையச் செய்தார்.

தக்ஷணத்திலுள்ள அரயரன் பட்டணத்துள் துராசாரி யென்னும் மங்கை காட்டிற் புலியினால் கொல்லப்பட்டு பின் நீசஸ்திரீயாய் பிறந்து வாழுநாளில், வாசுதேவசன்மாவென்பவனால் கீதா பதிமூன்றாமத்தியாயப்படன சமயம் அதிற் சில சிரவணஞ்செய்ததனாலேயே மோக்ஷமடைந்தனள்.

N. T. JEEVA & CO.,

N. T. ஜீவா அண்டு கோ.,

நெ. 1/382, தங்கசாலை தெருவு, சௌகார்பேட் போஸ்டு,

மதராஸ்.

8-மூலை பாகெட் கெடியாரம்.

இந்த 8-மூலைகள் உள்ள பாக்கட் கெடியாரத்தை நூதனமாய் இப்பொழுதே வரவழைக்கப்பட்டது. இதை இஷ்டமானபோது ஜோபியில் போட்டுக்கொள்ளலாம், தவிர மேஜையின்பேரிலும் டைம்பீஸ் போல் நிற்கவைக்கலாம், இதன் பின்புறம் மூடிக்கு தலைசாவிபக்கம் கீல் வைத்திருப்பதால் இதை திறந்து மேஜையின் பேரில் வைக்க சுலபமாய் இருக்கும், இது பார்வைக்கு மெத்த கம்பீரமாகவும் அழகாயும் இருப்பதுடன் வெகுகாலம் நன்றாய் உழைக்கக்கூடியது, உறந்த சாமான்களால் செய்யப்பட்டது.

இதன் விலை ரூபா 5—8—0

8-மூலை காப்பு டையல் பொன்கில்ட் ரேடியம் ரிஸ்லெட் கெடியாரம்.

இந்த 8-மூலை உள்ள பொன்கில்ட் ரேடியம் ரிஸ்லெட் கெடியாரம் பார்வைக்கு வெகு அழகாயும் ஆச்சரியமாயும் இருக்கும், சரியானடைம் காட்டும், வெகுகாலம் நன்றாய்போகும், இரவில் மணி நன்றாய் தெரியும்.

உயர்ந்த தோல்பட்டையுடன் 9—8—0

டை நிக்கில்கேஸ் ரேடியம் 8-மூலை உள்ள கைகெடியாரம் தோல்பட்டையுடன் 8—0—0

அசல் சொக்கவெள்ளி ரேடியம் ரிஸ்லெட் கெடியாரம்.

இரவில் விளக்குவெளிச்சம் இல்லாமல் மணிபார்க்கலாம்

இந்த வெள்ளி ரிஸ்லெட் கெடியாரங்களை கையில் அணைய வெகு அழகாயும் கச்சிதமாயும் நல்ல வேலைப் பாட்டுடன் செய்யப் பட்டது இதில் ரேடியம் என்னும் வஸ்துவை அமைத்திருப்பதால் இரவில் மணி நன்றாய் தெரியும் சரியானடைம் காட்டக்கூடியது உயர்ந்த சாமான்களால் செய்யப்பட்டது பார்வைக்கு அடக்கமாயும் சுத்தமாயும் இருக்கும் இதைப்பார்ப்பவர்கள் ஆச்சரியப் படுவார்கள். ஆயிரக்கணக்காய் சிலவாகிறது வெகுகாலம் நன்றாய் போகக்கூடியது.

இரவில் மணிகாட்டும் சொக்கவெள்ளி ரேடியம் ரிஸ்லெட் கெடியாரம் தோல்பட்டையுடன் ரூபா. 8—0—0

அசல் சொக்க வெள்ளி கையில் கட்டும் லேடீஸ கெடியாரம்.



இந்த வெள்ளி லேடீஸ் கெடியாரங்களை இஷ்டமானபோது கையில் கட்டிக்கொள்ளலாம் ஜோபியிலும்போட்டுக் கொள்ளலாம் வெகு அழகும் உறுதியும் உள்ளது இதை அதிக வுயர்ந்த சாமான்களால் செய்தது நன்றாயிருக்கும்.

லேடீஸ்வெள்ளிகெடியாரம் தோல்பட்டையுடன்	7—8—0
ஷை உயர்ந்த கெடியாரம் சமிஞண்டு உள்ளது	8—8—0
நிக்கல் லேடி கெடியாரம் தோல்பட்டையுடன்	6—8—0
ஷை பொன்கில்ட் உள்ள கெடியாரம்	7—0—0

எலக்ட்ரோ கோல்ட் பிளேட் 8 மூலை ரிஸ்டு வாச்.

இக்கெடியாரத்தின் கேசும் பிராஸ்லட்டும் எலக்ட்ரோ கோல்டினால் செய்யப்பட்டு பார்வைக்கு வெகு சுந்தரமாயும் படத்தில் காட்டியதைப்போல் இருக்கும் இக்கெடியாரம் அமெரிக்காவில் கைதேர்ந்த வேலைக்காரர்களால் தயார் செய்யப்பட்டது ஒவ்வொரு கெடியாரமும் நேரில் பார்வை செய்து அனுப்பப்படும். பிராஸலெட்டுடன் ரூ. 8-8-0

வெள்ளி கெடியாரம் ரூ. 9-0-0 நிக்கல் கேஸ் ரூ. 7-0-0

ரேடியம் வேண்டுமானால் ரூ. 1-8-0 அதிகம் சார்ஜ் செய்யப்படும்.

வெள்ளி லேடீஸ் சிறியசைஸ் பாகெட் கெடியாரம்.

ஜோபியில் போட்டுக்கொள்ள சின்னசைஸ் கெடியாரம் வேண்டுமென்று அனேகர் கோரியபடியால் இப்பொழுது வரவழைத்திருக்கிறோம்.

இது அசல் வெள்ளியினால் செய்யப்பட்டது பார்வைக்கு மெத்த அழகாயும் ஜோபியில் போட்டுக்கொள்ள மெத்த அடக்கமாய் இருக்க சிறியசைசில் தயார்செய்து வரவழைக்கப்பட்டது. சரியான காலத்தைக் காட்டக்கூடியது விலையும் மெத்த சகாயம் சீக்கிரத்தில் முந்திக்கொள்ளுங்கள் சொல்ப ஸ்டாக்குதான் இருக்கிறது.

வெள்ளி லேடி பாகெட் கெடியாரம் நிக்கில் வெள்ளி சங்கிலியுடன் ரூபா 7—8—0

சிறிய சைஸ் நிக்கல்சில்வர் கேஸ் பாகட் கெடியாரம் நிக்கில்வெள்ளி சங்கிலியுடன் 6—8—0

அமைகோ என்னும் நூதன பயாஸ்கோப் பெட்டி.

இந்த "அமைகோ" ஜெர்மனியில் தயார் செய்தது. இதில் ஜெர்மனியின் தர்பார் பார்லிமென்ட் சபையில் ஒருவருக்கொருவர் தர்க்கம் செய்து பேசுவது, இங்கிலாந்தின் பெரிய அரண்மனைகள், காங்கிரஸ் சபை, லார்ட் சபை, குதிரைப் பட்டாளம், பீரங்கிப்பட்டாளம், ஆகாய விமானம், பட்டாளம் முதலியவை கபாத் செய்வது, தொழிற்சாலைகளின் காட்சி, மிருகஜந்துக்கள் சர்க்கஸ் ஆடுவது குதிரை மோட்டார் பந்தயங்கள் இதுவுமல்லாமல் கீர்த்தி வாய்ந்த ஐரோப்பிய ஸ்திரீ புருஷர் டிராமா ஆக்டர்கள் ஆக்ட்செய்த ஆட்டங்களையும் பெரிய பயாஸ்கோப் கம்பெனியில் காணுவதைப் போல் இரவிலும் பகலிலும் பார்க்கலாம்.

40 பல கலர் தந்த போட்டோ பிலிம்சுகளும் சேர்ந்து லென்சஸ் உள்பட கம்பிலீட் செட் 1-க்கு ரூபா 1.

எலக்டிரிக் பௌன்டன் லாம்பு.



எலக்டிரிக் பௌன்டன்
லாம்பு 1-க்கு 4—0—0

A BOON TO SMOKERS.

எலெக்டிரிக் சிகார் லைட் விளக்கு.

இந்த விளக்கு அற்புதமாயும் ஆச்சரியமாயும் இருக்கும் வத்தியும் அதைக் கொளுத்த நெருப்புக்குச்சியும் தேவையில்லை. எலெக்டிரிக் சத்தியினால் எரியும்

நெருப்பு தேவையானால் விளக்கின் டைரெக்ஷன்படி செய்து மேல்புறத்தில் அமைத்திருக்கும் சக்கிரத்தை திருப்பினால் திக்கென்று பள பளப்பான பிரகாசத்துடன் எரியும் பின்புறம் மூடிப் பக்கத்தில் மறையை கழட்டிவிட்டு பெட்ரோல் எண்ணை போட வேண்டியது.

லைட் 1-க்கு விலை ... ... ரூ. 1 0 0

ஒரே தடவையில் 3-லைட் ... ... ரூ. 2 10 0

ஆரியாருளிச்செய்த ஆயுதவெழுத்து அதி சிலாக்கியசாகும்.

சத் ஸத்யம்.

மனோல்லாசனி

ஜலதரங்கம் என்னும் சங்கீத வாத்திய பெட்டி.

பெரியவர்களும் சிறியவர்களும் சங்கீதம் கற்றுக்கொள்வதற்கு இது ஓர் ஏற்ற கருவியாகும் ஜலதரங்கம் வாசிப்பதுபோல் இதை அருமையாக வாசிக்கலாம் விலை வெகு சல்லபம்.

பெட்டி 1-க்கு 1—0—0.

படுக்கை அறையின்

அழகிய காதல் படங்கள்

இப்படங்களின் அழகை இதில் எழுதமுடியாததினால் சுருக்கி எழுதலானேம். இப்படத்தில் ஆண் பெண் இருவரும் காதல்கொள்ளுவதைப்பார்த்தால் மிக ஆச்சரியகரமாயும் விடா நகைப்பும் தரக்கூடிய முக்கியமான படங்கள். இது ஒவ்வொரு வீட்டிலும் படுக்கை அறையில் அவசியமாயிருக்கவேண்டும்.

12 படங்கள் விலை ரூபாய் 3 0 0

மஹா மகிமைபொருந்திய திருவள்ளுவநாயனர் அருளிச்செய்த

ஞானவெட்டியான்

மூலமு உரையு 1500.

இந்த அருமையான நூலானது மகா மகிமைபொருந்தின திருவள்ளுவநாயனரால் அருளிச்செய்யப்பட்டதென்று யாவரும் உணர்ந்தவிஷயம் ஆனாலும் இந்நூலானது அனேக வருஷங்களாகச் சுத்தமாகப் பதிக்கப்படாமல் பிழையாகவே பதிக்கப்பட்டு வருவதுடன் நல்ல காகிதத்திலும் அச்சிடாமலேயிருந்தது இந்நூற்றாண்டில் கல்வி முதிர்ச்சியின் மிகுதியினால் உலகத்திலுள்ள ஜனங்களெல்லாம் சுத்தபதிப்பாகவும் நல்ல கடிதமாகவும் நூற்கள் இருத்தல் வேண்டுமென்று விரும்புகிறார்கள், இது யாவருக்கும் சம்மதமான விஷயமேயல்லவா? ஆம் ஜனங்களுக்கு நூற்களிலுள்ள திருப்தி இவ்வளவோடு முடியவில்லை இன்னும் ஒரு திருப்தியும் உண்டு அதுதான் பெரியதிருப்தி (அதாவது தற்கால பேதத்தால் ஜனங்கள் தாய்பாஷை மறந்து அந்நியபாஷையை விரும்புகிறபடியால் அப்பாஷை எப்படி வசனநடையில் வழங்குகிறதோ அப்படியே தமிழ்ப் பாஷையிலுள்ள பாடல்களின் கருத்துகளையும் வசனமாகச் செய்வித்தால் யாவருக்கும் பயன்படும் என்றுமெண்ணுவதேயாம்.)

1 சரீரதத்துவம், 2 சரியை, 3 கிரியை, 4 யோகம், 5 ஞானம், 6 பூர்ணநிலை, 7 பொய்க்குமெய்க்குரு, 8 கருவிவரம், 9 வாதவித்தை, 10 வயித்தியவித்தை, 11 முப்பூமுடித்தல் 12 வாசிதாரணை 13 ஆயுள்வளர்க்கும்விதி 14 கற்பமுண்ணும்விதி இன்னும் பல விஷயங்கள் முதலியவைகளை உள்ளங்கை நெல்லிக்கனிபோலுணர்ந்து அவ்வழியையனுசரித்து அவ்வவ்வழியில் நல்லதேர்ச்சியையடைவதற்கு யாதொரு தடையுமிராது இந்த நூல் எல்லாமதஸ்தர்களும் இதை அவசியம் வாங்கி வாசிக்கக்கூடியதே.

புல் காலிக்கோ பயிண்டு இதன் விலை ரூபா 2 8 0

அமெரிக்கன் போட்டோகிறுப் மோதிரம்.



இம்மோதிரத்தின் சிறு துவாரத்தில் பார்த்தால் கிருஷ்ணன், காளி, ஈஸ்வரன் பிரம்மா, எமன், காளி ஜெகன்னாதம் முதலியது காணப்படுகின்றன இதை ஸ்ரீ, புருஷர்கள் கையில் அணிந்துக்கொண்டால் லக்ஷிமிகரமும் முகதேஜசும் உண்டாகும்.

மோதிரம் 1-க்கு விலை ரூபா 1 0 0

ஒரே தடவையில் 3-மோதிரம் வாங்கினால் ரூபா 2 0 0

இங்கிலீஷ் டாக்டர்களால் கண்டுபிடிக்கப்பட்ட சுகானந்தா என்னும் இரகசிய ரப்பர் பை.

மேற்படி ரப்பர் பையை இங்கிலீஸ் டாக்டர்களால் பரீக்ஷைசெய்து சீமையிலிருந்து வரவழைக்கப்பட்டது. இதை புருஷர்கள் உபயோகித்து ஸ்திரீயின்பம் செய்வாராகில் எவ்வித மேகவியாதிகள் அணுகவொட்டாமல் தடுத்து வெகுநேரம் இன்பத்தை தரக்கூடியது. ரப்பர் கருவி 1-க்கு ரூபா 1-4-0.

கற்பகம்.

ஓர் செந்தமிழ் மாத சஞ்சிகை.

வருஷ சந்தா ரூ. 1 0 0 வெளிநாட்டிற்கு ரூ. 1 8 0

இதில் கல்வி, சாஸ்திரம், சுகாதாரம், கைத்தொழில், வேதாந்தம் இராஜாங்க ஜனங்க சீர்திருத்தங்கள் நூதன கற்பிதங்கள், மதவிஷயம், சிறுவர் சிறுமிகளுக்கான விஷயங்கள், உலக அற்புதம், வர்த்தமானம், விநோதக்கூற்று முதலான அரும் விஷயங்களுடன் வெளிவருகிறது.

மானேஜர் "கற்பகம்" ஆபீஸ் புதுவை.

நாடார் குல மித்திரன்.

மாதம் மும்முறை பதிப்பு.

இது தென்னிந்தியாவில் உலாவிவரும் முக்கிய தமிழ் பத்திரிகைகளில் ஒன்று. இது பிரதி இங்கிலீஷ் மாதம் 1, 11, 21, தேதிகள் தோறும் அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்கசபையினின்று வெளிவரும்.

இது வியாபார விருத்திக்குரிய விஷயங்கள், விவசாய நுட்பம் கைத்தொழில் குறிப்பு அந்நியநாட்டு வர்த்தமானம், பொதுச்சமாச்சாரம், இராஜாங்கமுறை முதலிய அரிய பெரிய விஷயங்களுடனும் வெளிவருவதோடு இந்திய க்ஷத்திரியகுல பாண்டிய நாடார்களின் அபிவிர்த்தியையே பிரதானமாகக்கொண்டு, தமிழில் பூரணபாண்டித்யம் பெற்ற சகோதர சகோதரிகள் எழுதும் அருமையான விஷயங்களையும் அடங்கத்திரட்டி மாணவ மாணவிகளுக்கும் நன்மதிபுகட்டும் தன்மையுள்ளது.

சந்தா விபரம்.

உள் நாட்டிற்கு	.... ரூ.	[illegible] 8 0
வெளி நாட்டிற்கு	.... ,,	4 0 0

சூ. ஆ. முத்து நாடார்,
பத்திராதிபர்.

தேசோபகாரி.

பர்மாவின் தலைநகரான ரங்கூனிலிருந்து ஞாயிறுதோறும் வெளிவரும் ஒரு சிறந்த வாரப்பத்திரிகை. சித்திரப்படங்களுடன் திகழ்வது. அரிய வியாசங்களைக்கொண்டது. தமிழர்களின் பொதுநலத்திற்காக உழைப்பது,

வருஷ சந்தா உள்ளூருக்கு	.... ரூபா	5 0 0
,, வெளியூருக்கு	.... ,,	6 0 0

பத்திராதிபர், தேசோபகாரி, ரங்கூன்.

பணம்.

திருச்சிறைப்பள்ளியினின்றும் 1-9-22 முதல் வெள்ளிக்கிழமை தோறும் வெளிவந்துலாவும் தெள்ளிய தமிழ் வாரவர்த்தமானி.

வாரந்தோறும் வெளியாவது. தேசநன்மையையேநாடி எழுதப் படுவது. அறிவைவிளக்கி உற்சாகத்தைக் கொடுப்பது. தமிழ் தெரிந்த ஒவ்வொருவர் அகத்துள்ளும் புகுந்து நிலவும் கீர்த்தி சிறந்தது. எவர் கையிலும் இப்பத்திக்கையை இனிக் காணலாம் படிக்க படிக்க விஷய மறிவதறின் பேரானந்தமும் பெருகும்.

வருட சந்தா ரூபா 5 0 0.

மானேஜர் "பணம்" ஆபீஸ். திருச்சி.

உங்களுக்கு

சுயராஜ்யம் வேண்டுமா? சுதந்திரதாகம் உண்டா? அரசியல் விஷயமறிய வேண்டுமா? காங்கிரஸ் விஷயம் தெரியவேண்டுமா? சமூக நிர்மாணம் தேவையா? பாஷாபி விருத்தி விருப்பமா? பண்டைச்சரித்திரம் படிக்கவேண்டுமா? கல்வி சுகாதாரம் வியாபாரம் தொழில் அபிவிருத்தி தேவையா? உலக அறிவு வேண்டுமா? மதப் படிப்பு அவசியமா? ஸமரஸம் விருப்பமா?

தஞ்சாவூர் சமரசபோதினி எல்லாவற்றையும் போதிக்கும்.

வருஷ சந்தா உள்நாடு .... ரூபா 7 0 0
" வெளிநாடு ... " 9 0 0

மானேஜர் "ஸமரஸபோதினி" தஞ்சாவூர்.

நவசக்தி.

(தமிழ் வாரப்பதிப்பு.)

திரு. வி. கல்யாணசுந்திர முதலியார், பத்திரிகாசிரியர்.

இப்பத்திரிகையில் ஜனநாயகமுறை, தொழிலாளர் இயக்கம், கைத்தொழில் வளர்ச்சி, விவசாய அபிவிர்த்தி, தேசபக்தி யூட்டக் கூடிய வேறு பல விஷயங்கள் எழுதப்பட்டு வருகின்றன.

சந்தா விபரம்.

வருஷ சந்தா .... ரூபா 5 0 0
ஆறுமாத சந்தா .... " 3 0 0
பினாங், சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா முதலிய
வெளிநாடுகளுக்கு வருட சந்தா 6 0 0

மாதிரி காபி வேண்டுவோர் 2 அணா ஸ்டாம்பு அ...

ஏஜெண்டுகள் தேவை.

மானேஜர் "...

44, பஜார் ரோட்...

தமிழகம்.

(வாரம் இருமுறைப் பதிப்பு.)

மலாய் நாட்டின் சிறந்த தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய்ப் பிரதி திங்கள் வியாழக்கிழமைகள்தோறும் வெளிவருகிறது. நம் தமிழ்நாட்டிலிருந்து பினங், சிங்கபூர், மவாக்கா முதலிய பிரதேசங்களை உட்படுத்திய தொடுவாய்ப்பகுதிகளிலும், ஐக்கிய மலாய் நாடுகளிலும், சாகோன், சுமத்ரா, ஜாவா, போர்னியோ, பிலிப்பைன்ஸ், பிஜி, முதலிய கீழ்தேசப் பகுதிகளிலும் குடியேறி வதியும் தமிழ் ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக் காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இஃது மலாய்நாடு, பிரஞ்சு, கொச்சின், சீன, நெதர்லாண்டு இண்டிஸ், பேகானியோ, இந்தியா, பர்மா, இலங்கை, நெட்டால் முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது. கீழ்தேசப் பகுதிகளுக்கு இதன் வருட சந்தா, வெள்ளி 10.00. ஆறு மாதங்களுக்கு வெள்ளி 5.50. இந்தியா, பர்மா, இலங்கை, நெட்டால் கென்யா முதலிய மேல்நாடுகளுக்கு வருட சந்தா ரூபாய் 15. ஆறு மாதங்களுக்கு ரூபாய் 8. நீடித்த விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

மானேஜர்:—"தமிழகம்" ஆபீஸ்,
நெம்பர் 190, பத்துரோட்டு, கோலாலம்பூர்,
ஐக்கிய மலாய் நாடுகள்.

தேசானுகூலன்.

இஃதோரு சிறந்த தமிழ்ப் பத்திரிகை வாரம் இருமுறை பினங்கினின்று தேசிய ராஜீய விஷயங்களுடன் வெளிவருவது. இதன் அருமை பெருமை அவசியம் முதலியவற்றை வாங்கிப் படித்த[illegible]து கொள்ள வேண்டுமின்றி எழுத வியலாது.

சந்தா விபரம்.

உள்ளூர் வெளியூர்கட்கு வருடம் 1-க்கு [illegible]ங்கி $ 10—0—0
அல்லது ரூபாய் 15—0—0
6 மாதத்துக்கு $ 5—5—0
அல்லது ரூபாய் 8—0—0

மானேஜர், தேசானுகூலன், பினங்கு.

"பைந்தமிழ்"

சித்திர விளக்கத்துடன் உள்ள ஓர் மாதாந்தரத் தமிழ்ப்பத்திரிகை. அரிய தமிழில் வெகு நல்ல நடையுடனும் சுவையுடனும்
[illegible]ரபல வித்வான்களால் எழுதப்பட்ட அநேக வியாசங்கள் உள்
[illegible] நாட்டு ஆண் பெண்களுக்கு அறிவை யூட்டுவது.
[illegible]கா விபரம்:—உள்நாடு ரூபா 2-8-0, வெளிநாடு
[illegible]ஞ்சிகை ருபா 0-4-0. சந்தாதாரராகச் சேர்ந்
[illegible]
[illegible] ஆபீசு, திருவல்லிக்கேணி சென்னை.